www.tamilarangam.net

**"தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் முன்னின்று உழைத்து மரணித்துப் போன போராளிகளுக்கு இது சமர்ப்பணம்."**

# VADU



**இதழ்-01**
**ஜுன்-2007**

தொடர்புகட்கு:
Thevathasan
4, Place Roger Salengro
95140 Garges Les Gonesse.
France

**நன்கொடை**
**1ஈரோ**
**சந்தா(வருடம்)**
**15ஈரோக்கள்**
**(தபாற்செலவு உட்பட)**

# "வடு"

என்ன இது "வடு"?
யார் இவர்கள்?
என்று நீங்கள் சிந்திப்பது புரிகிறது.

***தீயினால் சுட்ட புண் ஆறுமே - ஆறாதே***
***நாவினால் சுட்ட வடு*** - என்பார் பொதுமறை தந்த வள்ளுவ பெருந்தகை.

அந்த வடுக்களின் சாட்சிகளே நாங்கள். எங்களிடமிருந்தே இந்த **வடு** வெளிவருகிறது.

**"எளியதுகள்"** என்ற ஏளனங்களை எதிர்கொண்டே பிறந்து, அந்த இழிவுபடுத்தல்களுடனே வளர்ந்து, எளிய சாதிகளாகவே வாழ்ந்து அதன்படியே இறந்தும்போக தமிழ் சமூகம் தனக்குள்ளேயே ஒரு பிரிவினரை நிர்ப்பந்தித்து வருகிறது அல்லவா? **தாழ்த்தப்பட்டவர்கள்** என்றும் **சிறுபான்மைத்த தமிழர்கள்** என்றும் **பஞ்சமர்கள்** என்றும் **தலித்துகள்** என்றும் அழைக்கப்படும் மக்களின் வாழ்வு ஏராளமான வடுக்களால் நிரம்பியதல்லவா?

இப்படி பச்சையாக நாம் எழுதுவது பலருக்கு அருவருப்பாக இருக்கலாம். ஆத்திரத்தையும் உண்டுபண்ணலாம். உங்களில் சிலரை முகம் சுழிக்கச் செய்யலாம். உண்மைதான். ஆனால் அதற்கான பொறுப்பாளிகள் நாம் அல்ல. **"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்"** என்று தற்பெருமை பேசிக்கொண்டு கேவலமான இந்த சாதி அமைப்பை கட்டிக்காத்துவரும் நமது சமூகமே அருவருப்பானது. அது கொண்டுள்ள சமூக யதார்த்தமே ஆத்திரம் கொள்ளப்படத்தக்கது.

"ஆனையிறவுக்கப்பால் எல்லோரும் ஒன்றுதான்" எனும் மாபெரும் வரலாற்றுப்பொய் புலம்பெயர்ந்த மண்ணில் இன்று அம்பலமாகியிருக்கின்றது. தஞ்சமடைந்த நாடுகளுக்குக்கூட சாதியை விமானமேற்றி இறக்குமதி செய்து உலகசாதனை படைத்திருப்பவன் யாழ்ப்பாணத் தமிழன். "உயர் குல வேளாள" மணமக்களுக்கு அந்தஸ்து மாறாத சோடிகளைத் தேடி பத்திரிகைகளில் ஏலம் விடுகின்ற கேவலங்களே அருவருப்பானது.

அந்த வகையில் தமிழ் சமூகம் கொண்டுள்ள சாதி ஏற்றத்தாழ்வுகளை, இலங்கையில் நடக்கும் சாதிக்கொடுமைகளை, புகலிடத்தில் தொடரும் சாதி காப்பாற்றுவதற்கான திட்டமிட்ட முனைப்புகளை பகிரங்கப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இன்னுமின்னும் நாம் பின்போட முடியாது.

என்ன இது? சாதிப்பிரச்சனைக்காக ஒரு பத்திரிகையா? ஆம். இது சாதிப்பிரச்சனைக்கான பத்திரிகையேதான்.

ஆண்டாண்டு காலமாக ஒடுக்குமுறைக்குள்ளாகிவரும் தலித் மக்களின் உணர்வுகளை, நெஞ்சுநிறை வடுக்களை, எதிர்காலம் குறித்த கரிசனைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ளும் ஒரு எத்தனிப்பாகவே இந்த **"வடு"** பிசுரமாகின்றது.

**ஆசிரியர்-**

**இது மாதமொருமுறை வெளியாகும் ஏடு**

www.tamilarangam.net

# ஒரு தலித்தின் குரல்.

தமிழ் சமூகத்தில் ஆண்டாண்டு காலமாக அழியாது கட்டிக்காத்துவரும் சாதி வழிமுறையானது எவ்வளவோ கொடூரமானது தமிழ் சமூக அறிவுஜீவிகளும் முற்போக்காளர்கள் எனச் சொல்லப்படுவோரும் இச்சாதிமுறை அழிவிற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

1977 வரை யாழ்ப்பாண சமூக அமைப்பில் உள்ள சாதியத் தீண்டாமை ஒடுக்குமுறைகள் பல கொடூர நிகழ்வுகளை நடத்தியிருந்தாலும் அதற்கெதிராக பஞ்சமர் எனச்சொல்லப்படுகின்ற தலித்துகள் சிறு சிறு அமைப்புகள் ஊடாக தங்களுக்கு இழைக்கப்படுகின்ற மனிதவுரிமை மீறல்களை அம்பலப்படுத்தி பின்னர் படிப்படியாக மகா சபைகளாக வெகுசன இயக்கங்களாக ஒன்றிணைந்த போராட்டங்களை முன்னெடுத்ததினூடாக உயர்சாதிக்கொடுமைகளில் இருந்து சிறிது சிறிதாக வெற்றிகளை பெற்றுக்கொண்ட வரலாறுகளை நாம் பார்த்திருக்கின்றோம்.

தமிழ் கலாசாரத்தின் பெயரில் ஆறுமுகநாவலர் தொடங்கி சேர்.பொன்.ராமநாதன், அருணாச்சலம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் போன்ற தலைவர்களின் வழிகாட்டல்களில் இன்றுவரை சாதி அமைப்பைக் கட்டிக்காத்துவரும் தமிழ் தேசப்பற்றாளர்கள், தமிழர்கள் எல்லோரும் ஒன்று என கோசமிடுபவர்கள் போன்றோர் சாதி அழிவிற்காக என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர். தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தாங்களே எதிர்கொண்டு தங்கள் சமூக மேம்பாட்டுக்காக உழைத்தவர்களை அழித்து அந்த அமைப்புக்களை சீர்குலைத்த தமிழ் தேசியவாதிகள் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக ஏதாவது திட்டங்களை முன்வைத்து செயற்படுத்தினார்களா? இந்த கேள்விக்கு தனிராட்சியம் அமைத்த பின்னர் பார்க்கலாம் என்பதே விடையாக இருந்திருக்கிறது. இப்பதிலானது பொய்யானதும் ஏமாற்று வித்தையும் ஆகும். மாறாக மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக உள்ளது. தமிழீழம் கேட்டவர்களோ வெளிநாடுகளில் உல்லாசமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்க ஒன்றுமே அறியாத அப்பாவி தலித்மக்கள் பசியிலும் பட்டினியிலும், ஒதுங்குவதற்கு ஓலைக்குடிலும் இன்றி துரோகிகளாகவும், மாவீரர்களாகவும், சமூக விரோதிகளாகவும், கலாசார சீரழிவுக் காரர்களாகவும் நித்தம் நித்தம் கொல்லப்படுகின்றனர். இவர்களது அடிப்படை பிரச்சனைகளையும் அன்றாடப்பிரச்சனைகளையும் யாரும் கண்டுகொள்வதில்லை. ஒட்டுமொத்த தமிழ் பிரச்சனை என ஒரு வார்த்தைக்குள் இவர்களது அவலங்கள் மூடிவிடப்படுகின்றது.

வெளிநாடுகளில் வாழுகின்ற தலித்துகளோ வீடு, கார் என வசதியோடு இருந்தாலும் மேற்சாதிகாரனுக்கு தங்கள் சாதியை மறைப்பதிலேயே அதிகநேரத்தை செலவுசெய்கின்றனர். உயர்சாதிக்காறனோ தன்னை உடனடியாக இனங்காட்டிக் கொள்கின்றான். இந்த இழிநிலை இன்னும் தொடர்கிறது. சாதிகளை மறைப்பதினால் சாதிகளை அழித்துவிட முடியாது. மாறாக அது பற்றிப் பேசவும் எழுதவும் நாம் தயங்கக் கூடாது. சாதியம் பற்றிய ஆக்கபூர்வமான விவாதங்களை உருவாக்குவதன் மூலமே அதற்கான மாற்றத்தை நோக்கி நாம் நகர முடியும். ●

## எழுத்தாளர் எஸ்.பொ. என்ன சொல்கிறார்...

இலக்கிய இயக்கத்திற்கு குருபீடமாக அமைந்த அரசியல் இயக்கமே யாழ்ப்பாணக் கலாச்சாரத்தின் தனித்துவத்திற்குள் அமுங்கிவிட்டது. அப்படி அமுக்கும் வலிமை யாழ்ப்பாணக் கலாச்சாரத்திற்கு உண்டு இதன் காரணமாகத்தான் மத்திய தர வகுப்பைச் சேர்ந்த உயர் சாதி இந்துக்களின் தலைமைப் பீடமே இடதுசாரி இயக்கத்தை வழி நடத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சாதிக் கட்டுப்பாடுகளின் இறுக்கம் வர்க்க முரண்பாடுகளுக்குத் தவறான விளக்கங்கள் கொடுக்கத் தூண்டியது. சக்கிலியனான ஸ்டாலினை ருஷியப் பெருமக்கள் ஒரு வர்க்கத்தின் பெருந்தலைவனாக ஏற்றுக் கொண்டனர். ஆனால் யாழ்ப்பாணத்துக் கலாச்சாரம் இதனைக் கற்பனை செய்து பார்க்கக்கூட அனுமதிக்கமாட்டாது!!!

(«இனி ஒரு விதி செய்வோம்» எனும் கட்டுரை நூலுக்கான எஸ்பொ வின் முன்னீடு. )

www.tamilarangam.net



## பெரியார் கூற்றிலிருந்து.

அரசியல் தத்துவம் சீர்படுத்தப்படவேண்டும் என்கிறதும், சுயேச்சை வேண்டும், தனியரசு வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும் என்கிறதுமான எண்ணம்தான் இருக்கிறதே ஒழிய சமூக இயலைப் பற்றி கவனிப்பாரே காணோம். இவ்விடயத்தில் அரசியல் சம்பந்தமான எல்லா இயக்கங்களும் சற்றேரக்குறைய எங்கு பார்த்தாலும் ஒரே மாதிரியான கருத்தையே கொண்டிருக்கின்றன. இவர்கள் அரசியல் எதேச்சதிகாரம் ஒழியவேண்டும், அனைத்து அராஜகமும் கண்டிக்கப்பட வேண்டும், ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற வீராவேசக் காரர்களுக்குள் சமூகக் கொடுமைகளை ஒழிக்கவேண்டும் என்ற உண்மையான கவலையுள்ளவர்கள் ஆயிரத்தில் ஒருவராவது இருப்பார்களா என்று சொல்லுவது மிகக்கஸ்டமாகயிருக்கிறது.

சமூக இயலின் புரோகித புரட்டுக்கு ஏமாந்த மக்கள் அரசியல் புரோகிதப் புரட்டுக்கு ஏமாறாமல் இருக்க முடியவே முடியாது. சமூகப் புரோகிதப் புரட்டை கண்டுபிடிக்க தைரியமும், யோக்கியதையும் அறிவும் இல்லாத மக்களுக்கு அரசியலில் மாத்திரம் கண்டுபிடிக்கும் அறிவும் ஆற்றலும் எப்படி உண்டாகக்கூடும். என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். சமூக வாழ்வில் ஆயிரக்கணக்கான ஜாதிப்பிரிவுகளை வைத்துக்கொண்டிருக்கும் ஒரு தேசமக்கள் அரசியல் விடுதலைக்கு அத்தியாவசியமான ஒற்றுமையை தங்களிடத்தில் காணமுடியுமா? சமூகவாழ்வில் தங்களைச்சேர்ந்த வர்க்கத்தாருக்கே நியாயம் வழங்கமறுக்கும் மக்கள் தங்களுக்குள் அரசியல் பொருளாதார இயல் ஆகியவைகளில் போர் புரியத்தக்க தலைவர்களை உண்டாக்கிக் கொள்ளமுடியுமா?

சமூதாயக் கொடுமைகளை ஒழித்து அவைகளிலிருந்து விடுதலை பெற கவலை கொள்ளாத நம்மை!!! அரசியல் சுதந்திரம் வேண்டும், சமத்துவம் வேண்டும், அன்னிய ஆட்சியிலிருந்து பூரணமாய் விடுபடவேண்டும் என்று வெறும் கூச்சல்போடும் நம்மை, வெளியார்கள் பார்த்து அயோக்கியர்கள் என்று சொல்லுவதில் என்ன அதிசயமிருக்கிறது?

தாங்கள் மானத்தோடு வாழ்வதற்கான அரசாங்கமும் தேசியமும் வேண்டுமே ஒழிய மற்றப்படி கேவலமானவைகள் மனித வயிறு வளர்க்க மாத்திரம் வேண்டியது என்றால் அதற்காக எந்த அரசாங்கமும், அரசியலும், தேசியமும் கண்டிப்பாய் வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். இதுவரை நமது நாட்டில் ஏற்பட்டிருந்த, ஏற்பட்டிருக்கின்ற எந்த அரசியல் இயக்கத்திலாவது, தேசிய உணர்ச்சியிலாவது தன் சுயமரியாதைக்கேற்றதான திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்ததா என்று அரசியல் வாதிகளையும், தேசிய வாதிகளையும் கேட்கின்றோம்.

சமூதாய சீர்த்திருத்தத்திற்கு வந்தவருக்கு எந்தவித தொடர்பும் பற்றும் இருக்கக்கூடாது. கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர் நடப்பு ஆகியவற்றில் பற்று இருக்கக்கூடாது. அது மட்டுமல்ல, நாட்டுப்பற்று, மொழிப்பற்று முதலியனவும் இருக்கக்கூடாது. இந்தப்பற்றுக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் மனதில் புகுந்து இருந்தும், இவற்றால் ஒன்றுமே ஆகவில்லை என்றால் நாம் என்ன பண்ண வேண்டும்? இந்தப் பற்றுக்களை விட்டு நம் மனதைச் சுத்தம் செய்து கொள்ளவேண்டாமா?

**(பெரியார்)**

**“வடு” பிரசுரத்திற்காக வாசகர்களிடமிருந்து கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், அனுபவப் பகிர்வுகள், செய்திக்குறிப்புகள் மற்றும் விமர்சனங்கள்..... போன்றவற்றை எதிர்பார்க்கிறோம். பொருத்தம் கருதி பிரசுரத்திற்கு கொள்ளப்படும்.**

**ஆ.ர்.**

www.tamilarangam.net



‘தமிழ் பட்டதாரிகளில் பெரும்பாலானோர் வெள்ளாளர்கள். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவ்வாறே. யாழ்ப்பாணத்தில் ஆயர் வெள்ளாள சாதியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அண்மைக்காலம் வரை பாதிரிமாருக்கும் அதே நிலமைதான்.’ என்று சொல்கிறார் இரட்ணஜீவன் ஹூல் (இலங்கையில் இனமுரண்பாடும் கல்வியும் ரொரண்டோ அறிக்கை)

இதுதான் நாம் எல்லோரும் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இலட்சணம். இந்த அடையாளப்படுத்தல் குறித்து நாம் அச்சப்படவேண்டியது எங்கேயென்றால், தேவையில்லாத போது வெளியே நில் நாயே! தேவையானபோது நாங்கள் எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று. எனச் சொல்லும் நிலையில் இருப்பது பற்றித்தான். இதனை நாம் தெளிவாக அடையாளம் கண்டுவிடவேண்டும். நாம் நமது நண்பர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலருடன் பேசிக் கொண்டிருக்கும்போது தமது மொழிகளுக்குள்ளாலே தமது சாதிகளையும் அதன் திமிர்களையும் அவர்கள் தம்மை அறியாமலேயே நமக்குச் சொல்லிக் கொள்வார்கள். சாதியின் ‘மூலம்’ தேடும் நண்பர்கள் பலரை எல்லோரும் சந்தித்திருப் போம். எவ்வளவுதான் சாதிவிடுதலை குறித்து பேசினாலும் அறிவு பூர்வமாக தெளிவில்லாமல் இருப்பார்கள். அவர்கள் உரையாடும் மொழி அவர்களது மனோநிலையை வெளிப்படுத்திவிடும். நான் சாதி பார்ப்பதில்லை. பள்ளன் பறைச்சியுடன் இருந்தெல்லாம் சாப்பிடுவேன் என்று ஒருவன் சொல்வதில் நாம் எதைக் கண்டுகொள்ள முடியும். ஏன் ‘அவனைக் கூட்டிக்கொண்டு வந்து நடுவீட்டுக்குள் வைத்திருக்கிறீர்கள்’ என்று சாதாரணமாகச் சொல்வதில் கூடசொல்வதில் சாதித்திமிர் இல்லை என்று யாரால் வாதாட முடியும்.

வெளிநாடுகளில் உயிர்த்து எழும்பிருக்கும் எத்தனையோ கோயில்களுக்கு நாங்கள் போய்வந்திருக்கிறோம். அநேக கோயில்கள் நாயினாதீவு நாகபூசணியம்மன், கனடா நல்லூர் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் என்று இருப்பதைப்பற்றி நாம் ஒருநாளும் கவலை கொண்டது கிடையாது.நமக்கென்ன என்றிருப்பது நல்லதுதான். ஆனால் கந்தசுவாமி கோயில் என்றோ அம்மன்கோவில் என்றோ வைத்தால் எல்லா ஊர்க்காரரும் உள்ளுக்குள் வந்துடுவான்கள் யார் என்ன சாதி என்று கண்டுபிடிப்பது கஸ்டம். தெல்லிப்பழை என்றால் நயினாதீவு என்றால் ஊருக்குள் யார்யார் எந்தாக்கள் என்பது தெரியும் தானே. விபரமான ஆக்கள். சேர் பொன் பரம்பரையல்லா....

எங்களை நாங்கள் தமிழர்கள் என்று பொத்தம்பொதுவாக அடையாளப்படுத்திக் கொள்கிறோம். எங்கள் மொழி தமிழ் என்பதை வைத்துக் கொண்டு அப்படிச் சொல்லிவிடுகிறோம். கடந்த காலங்களில் சிங்கள அரசாங்கம் எம்மீது மேற்கொண்ட வன்முறைகள் தமிழர்கள் என்று எம்மை ஒன்றுசேர வைத்ததாக நாம் சொல்லிக் கொள்கிறோம். எமது இனத்திற்கென ஒரு நாடு வேண்டுமென்று சொல்லி ஒரு தேசிய அடையாளத்திற்குள் எங்களை அடையாளப்படுத்துகிறோம். இந்த அடையாளம் எவ்வளவு உண்மைத் தன்மை கொண்டது? எவ்வளவு நம்பகத் தன்மை கொண்டது? என்று எந்தக் கணத்திலேனும் நாம் எண்ணிப் பார்த்ததில்லை.

ஈழத்தமிழர்கள் என்று பொத்தம் பொதுவாக அடையாளப்படுத்துவதற்கு வெறுமனே மொழி மட்டும் பொதுவாக இருத்தல் போதாது. ஏனெனில் தமிழ்மொழி பேசிய முஸ்லீம் மதத்தவரை நாம் தமிழர்கள் என்று இன்றுவரை ஒத்துக் கொண்டதில்லை. இயலுமானவரை எவ்வளவு துன்புறுத்த முடியுமோ அவ்வளவு துன்புறுதலைக் கொடுத்த வண்ணமேயுள்ளோம்.

ஈழத்தில் அண்மைக்காலம் வரையும் எத்தனையோ சாதிக்காரர்களுக்கு கோயில் கதவு பூட்டிக் கிடந்த வரலாறு நமக்குத் தெரியும். இன்றைக்கு திறந்திருக்கின்றது என்று சொல்லிக் கொள்ளும் நாம் அதே சாதிகளுக்கு எந்தக் கோயிலிலாவது ஒரு நாள் திருவிழாவை நடாத்த உரிமையுள்ளது என்று சொல்லிவிட முடியுமா? புலம் பெயர்நத பிரதேசங்களில் எந்தனை கோயில்கள் முளைத்துள்ளது. இதில் எந்த ஒன்றிலாவது ஒடுக்கப்பட்ட சாதி மக்களுக்கென ஒரு நாள் தன்னிலும் ஒதுக்கப்பட்டுள்ளதைக் காட்ட முடியுமா?

www.tamilarangam.net

**இலங்கை தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்த கலந்துரையாடல் மாநாடு ஒன்று இலங்கையர் ஜனநாயக முன்னணி அங்கத்தினரால் ஜேர்மனியில் நடத்தப்பட்டது. 11-11-2006 சனிக்கிழமையும் 12-11-2006 ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்ற அம்மாநாட்டில் தலித் மக்களுக்கான நியாயம் கோரி ஐரோப்பாவில் இயங்கிவரும் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரால் ஒரு அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தது. இவ்வறிக்கையில் வடக்கு, கிழக்கு வாழ் தலித் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மற்றும் அரசியல் எதிர்காலம் குறித்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அக்கோரிக்கைகள் பின்வருமாறு.**

பெயரளவிலேயே சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான சட்ட திட்டங்கள் எமது நாட்டில் நிலவுகிறது. ஆனால் நடைமுறையில் சமூக மேலாதிக்க உணர்வு நிலையின் அடிப்படையில் தலித்துகளுக்கு சமூக நீதி, நியாயங்கள் மறுக்கப்பட்டே வருகின்றது. எனவேதான் அதிகார மையங்களை நோக்கிய அரசியல் ரீதியான உத்தரவாதங்களை நாம் கோருகின்றோம். இப்போதுள்ள வடக்கு மற்றும் கிழக்கு சனத்தொகைப் பரம்பலின் விகிதாசாரத்திற்கு ஏற்புடையதாக சில உத்தரவாதங்களை தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்படும் தீர்வுத்திட்டங்களில் கொண்டிருக்க வேண்டும் என கோருகிறோம்.

சகல மட்டங்களிலுமான அதிகாரங்களில் தலித்துகளுக்கென வட மாகாணத்தில் ஐ50 வீதமான பிரதிநித்துவங்களையும் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு இருபத்தைந்து வீதமான பிரதிநிதித்துவங்களையும் உத்தரவாதப்படுத்த வேண்டியது அவசியமாகும். குறைந்த பட்சம் எதிர் வரும் ஐ50 வருடங்களுக்கு மேற்படி உத்தரவாதம் நடைமுறைப் படுத்தப்படும் பட்சத்தில் மட்டுமே பல நூற்றாண்டுகாலமாக ஒடுக்கப் பட்டுவந்த தலித் சமூகமானது ஏனைய தமிழ் சமூகங்களுடன் சமமாக வைத்து பரிசீலிக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

***1 அரசியல் பிரதிநிதித்துவங்களை உத்தரவாதப் படுத்துவதற்கு ஏதுவாக தலித்துகளுக்கு மட்டுமேயான தேர்தல் அலகுகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இலங்கை மத்திய ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட தேர்தல்களிலும், தமிழ் மக்களுக்கான சுயாட்சியைக் கொண்ட தேர்தல்களிலும் மேற்படி தேர்தல் ஒதுக்கீடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.***

***2. அரச துறைகள் அனைத்திலும் வழங்கப்படுகின்ற உத்தியோகங்களிலும் தற்போதைய தலித்துக்களின் குடியிருப்பு விகிதாசாரத்திற்கேற்ப ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும்.***

***3. பல நூற்றாண்டு காலமாக எவ்வித மாற்றமுமின்றி (அடிமை முறைச் சட்டம் ஒன்றே நீக்கப்பட்டது. அதுவும் ஆங்கிலேயரின் முயற்சியினால்) வழக்கத்தில் நிலவுகின்ற யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம் நீக்கப்பட்டு புதிதான சிவில் சட்டம் இயற்றப்பட வேண்டும்.***

***4.(அ) தலித்துகளின் மேம்பாட்டினை கருத்தில் கொண்டு ஒரு விசேட ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும். இவ் ஆணைக்குழு சமூக பொருளாதாரம், கல்வி, குடியிருப்பு மற்றும் சட்ட ரீதியாக அடையாளம் காணப்படுகின்ற சகல துறைகளிலும் தலித்துகளின் சமூக நிலையை ஆய்வு செய்யும் நிலை உருவாகவேண்டும்.***

***(ஆ) மேற்படி ஆணைக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் தலித்துக்களாக மட்டுமே இருப்பதோடு மேலும் முஸ்லிம், சிங்கள பிரஜைகளையும் உள்ளடக்கியவர்களாக அமைதல் வேண்டும்.***

●

எமது

## அடுத்த இதழில் இருந்து ஆரம்பமாகிறது!

**தீண்டாமைக் கொடுமைகளும் அதற்கு எதிரான போராட்டகளும், நினைவுகளை மீட்டு வரலாற்றுத் தொடராக எழுதவிருக்கிறார் பிரான்சிலிருந்து தோழர் *யோகரெட்ணம்* அவர்கள்.**

www.tamilarangam.net

# கின்னியா வாழ் தலித்மக்களின் குரல்

இந்துத்துவத்தின் பிடியில் சிக்குண்டு... தீண்டாமை ஒடுக்குமுறைப் பொறிக்குள் வாழ்ந்து வந்த பஞ்சமர் எனும் தமிழ் இனத்தின் ஒரு பகுதியினர் காலத்துக்குக் காலம் அந்த ஒடுக்குமுறையில் இருந்து விடுபட பிற மதங்களை தமது பாதுகாப்பிற்காக தேடிக்கொண்ட வரலாற்றை நாம் பார்த்து வருகிறோம்.

இந்தவகையில் முஸ்லிம்கள் வியாபார நோக்கத்தோடு இலங்கை வந்தபோது அவர்களுடைய கருத்துக்களாலும், சகோதரத்துவ பண்புகளாலும் கவரப்பட்டு தலித் சமூகத்திலிருந்து பலர் முஸ்லிம்களாக மதம் மாறியுள்ளனர். அதன் பிற்பாடு போத்துக்கேயர், ஆங்கிலேயர் என கிறிஸ்தவ மதத்தினர் இலங்கை வந்த காலகட்டத்திலும் பல தலித்துக்கள் கிறிஸ்தவ மதமாற்றத்தின் மூலமாக தமது சமூக பொருளியல் மேம்பாட்டை வளர்த்துக் கொண்டனர்.

இவ்வாறான நிகழ்வுகளுக்கு காரணமாகவும் அதற்கு பொறுப்பாகவும் இருந்தது, இந்து மதமும் அதனது வர்ணாச்சிரம சாதியக் கொடுமையுமே!!! என்பதை நாம் இலகுவாக இனம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான இந்து மதமும் அதன் விளைவாலான இந்துத்துவ உணர்வு நிலையே எமது தமிழ் சமூகம் உட்பட இந்தியத் துணைக்கண்டத்திலும் வாழும் இந்துத்துவ சமூகங்கள் அனைத்தையும் வழி நடத்தி வருகிறதை நாம் காணலாம். எமது தமிழ் சமூகத்தையும் அதன் உள் முரண்பாடுகளையும் கவனத்தில் கொள்ளாத நிலையில் மேற்கொள்ளப்படும் 'விடுதலைப்போராட்டம்' என்பது ஒரு குறிப்பிட்ட மேலாதிக்கச் சமூகத்தினரின் நலனுக்கானதே என நாம் தொடர்ந்தும் அடம்பிடிப்போம்... அதில் உறுதியாகவும் உள்ளோம். இதை நியாயப்படுத்தவும், உறுதிப்படுத்தவுமான ஓர் செய்தியையே நாம் உங்கள் முன்வைக்க கடமைப்பட்டுள்ளோம்.

ஆம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவில் வசித்துவந்த ஓர் இளைஞர் எமக்கு தெரிவித்த செய்தியையே நாம் இங்கு தருகிறோம்.

இன்று தமிழ்த்தேசியம் எழுச்சி பெற்று போராடுவதாகக் கூறப்படும் இக்காலகட்டத்திலும் தலித் மக்கள் இந்துத்துவத்தில் இருந்து முஸ்லிம் மதத்திற்கு மாறும் நிலை தொடர்கிறதெனில் தமிழ்த் தேசியத்தின் கையாலாகாத்தனத்தை நாம் எளிதாக புரிந்து கொள்ளமுடியும். திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவுக்கு 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆலங்கேணி எனும் கிராமத்தில் முஸ்லிம் மக்களே அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடன் இந்து உயர் சாதியினரும் வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு பிரிவினருக்கும் இடையில் நூற்றி ஐ50 தலித் குடும்பங்களும் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த தலித் சமூகத்தினரின் கர்ம வினைத் தொழிலாக, பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வருவது நகரசுத்தீகரிப்புத் தொழிலாகும். இக்குடும்பங்களானது தொடர்ச்சியாக இந்துத்துவ உயர் சாதியினரால் தீண்டாமைக் கொடுமைகளுக்குள் சிக்குண்டே தமது வாழ்வை நகர்த்தி வந்துள்ளனர். இந்த உயர் சாதியினரின் ஒடுக்கு முறையிலிருந்து விடுபடும் நோக்கமாக 1980 ஆம் ஆண்டிலிருந்து சிறிது சிறிதாக முஸ்லிம் மதத்திற்கு மாறத் தொடங்கினர். கிட்டத்தட்ட 50 குடும்பங்கள் முஸ்லிம்களாக மாறி தமது சாதிய அடையாளங்களை உடைத்து முஸ்லிம் எனும் அடையாளத்துடன் வாழத் தொடங்கினார்கள். இந்த முஸ்லிம் மத மாற்றத்தினால் இவர்கள் கர்மவினைத் தொழிலான நகரசுத்தீகரிப்புத் தொழிலையும் துறந்து முஸ்லிம் சமூகத்தினரைப்போல் பல் வேறுபட்ட வியாபாரத் துறைகளில் ஈடுபட்டு தமது வாழ்வை மேம்படுத்தியதோடு, முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் தாம் எவ்வித சமூக பாகுபாடுகளும் இல்லாது சமத்துவமாக வாழ்வதையும் உணர்ந்து கொண்டனர்.

இத் தலித் சமூகங்கள் முஸ்லிம்களாக மாறியதையும் தங்கள் ஏவல் பணிகளை மேற்கொள்ளாதிருப்பதையும் சகிக்க முடியாதவர்களாக இருந்தனர் உயர் சாதி இந்துக்கள். சுனாமி இயற்கை அழிவின் பின் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் கிடைக்கப்பெற்ற நிதி மூலம் இன்னும் மதம் மாறாதிருந்த நூறு தலித் குடும்பங்களை முஸ்லிம்கள் வாழும் பகுதியிலிருந்து தொலைவிலுள்ள இடங்களுக்கு குடியேற்றுமுகமாக, தாழ்த்தப்பட்ட சமூக அபிவிருத்தி அமைப்பு எனும் பெயரில் அமைப்பொன்றையும் உருவாக்கினர். பின்பு அதனூடாக தனி வீடுகள் கட்டித்தருவதாகவும், பாடசாலைகள் அமைத்துத் தருவதாகவும் ஆசைகள் ஊட்டப்பட்டு சைபர் நகரிலுள்ள அலெக்ஸ் தோட்டத்தை பாரதி புரம் என்னும் பெயர் மாற்றத்துடன் அந்த ஐ50 தலித் குடும்பங்களையும் குடியமர்த்தினர். ●

# யார் நீ?

நீ யார்?
ஊரில் எந்த இடம்
வட்டாரம் என்ன
எந்தக் குறிச்சி

நான் தம்மையா வாத்தியார் மகன்
என் பாட்டனார்
கந்தப்பிள்ளை விதானையார்
என் கொப்பாட்டனார்
முருகுப்பிள்ளை உடையார்
நீ யார்
மீண்டும் மீண்டும் கேட்கிறான்.............

நான் யாழ்ப்பாணத்து
சாதிப்புதைக்குழிக்குள்
முடங்கிக் கிடந்து
எழுந்து, பறந்து
குளிர்கால தேசத்தில்
மூச்சுத்திறந்தேன்
புதிய உலகில்
புதியகருவாய்...

அவன்!
மீண்டும்... மீண்டும்...
நான் தம்பையா மாஸ்டர் மகன்.
நீ யார்?



*-சித்தன்-*

# புலம்பெயர்
## நாட்டு நடப்பு

ராஜனும், கவிதாவும் குழந்தைகளாக இருந்தே ஒன்றாகப் பழகியவர்கள், ஒன்றாகப் படித்தவர்கள். கவிதாவின் பருவ மாற்றத்தின் பின் இவர்கள் இருவரும் தொடர்ந்து பழகியதைப் பொறுக்காத பெற்றார், சொந்தக்காரரின் சாதிய அறிவுறுத்தலின் பின்னர் ராஜன், கவிதாவிற்கிடையில் நடந்த உரையாடல்

ராஜன்: என்ன பிரச்சன ஒன்றும் கதைக்காமல் தூரத்தில நிற்கிறாய்?

கவிதா: ஒன்டும் இல்ல..........

ரா: உனக்கு ஏதோ பிரச்சனை இருக்கிது சொல்லு!

க: என்ர அம்மா சொன்னவ உன்னோட இனி கதைக்க வேண்டாமாம்!

ரா: ஏனாம்?

க: நீங்க ஊரில வேற ஆக்களாம்.

ரா: நாங்களும் உங்களமாதிரி தமிழ்தானே.

க: எனக்கு தெரியாது நீங்க ஊரில குறஞ்ச ஆக்களாம். உங்கள எங்கட வீட்டுக்குள்ளயும் விடுற இல்லையாம். இனிமேல் கதைக்க வேண்டாமாம்.

ரா: ??????

●

படியுங்கள்....
எமது தோழமை
இணையத்தளம்
"தூ"
http://www.thuuuu.canalblog.com/

www.tamilarangam.net

# அது என்ன 'தலித்'?

## பிரபல எழுத்தாளர் டொமினிக் ஜீவா இப்படி விளக்குகிறார்.

> "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்" என்கின்ற டொமினிக் ஜீவா அவர்களின் சுயசரிதை நூலின் முன்னுரையிலிருந்து...

பஞ்சமர் என்ற சொல் யாழ்ப்பாண மாவட்டத்திற்கே உரித்தான தனித்துவமான வட்டாரச் சொல். இந்தப் பஞ்சமர் சாதியில் ஐஐந்து சாதியினர் அடங்குவர். அம்பட்டர், வண்ணார், பள்ளர், நளவர், பறையர். இந்த ஐந்து சாதிகளுக்குள் அடங்கக் கூடிய ஒரு சாதியைச் சேர்ந்தவன் தான் நான். கொஞ்சம் நாகரிகமாகச் சொன்னால் நாவிதன்!

ஆனால் தமிழகத்தில் - இந்த அடி நிலை மக்கள் - முன்னர் காந்திய காலத்தில் ஹரிஜனர் என அழைக்கப்பட்டனர். காந்தி அடிகள் கூட. இவர்கள் ஞாபகார்த்தமாக 'ஹரிஜன்' என ஒரு பத்திரிகையே நடத்தி வந்தார்.

காந்தி சகாப்தத்திற்குப் பின் இந்தக் கடவுளின் குழந்தைகளை இந்தியத் துணைக்கண்டமே கைவிட்டு விட்டது.

இதன் பின்னர் அம்பேத்கார் குரலாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, அவரது ஒப்புதலின் படி 'தலித்' எனத் தம்மை ஒட்டுமொத்தமாக அழைக்கத் தலைப்பட்டனர் இந்தப் பஞ்சப்பட்ட மக்கள்.

தலித் என்ற சொல் ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட, பஞ்சப்பட்ட, தாழ்த்தப்பட்ட சகல மக்கள் பகுதியினரையும் உள்ளடக்கிய சொல்லாக - இலக்கியம் அங்கீகரித்த சொல்லாக இது புழக்கத்தில் வந்துவிட்டது. அகில இந்தியச் சொல்லாகவும் பரிமாணம் பெற்றுவிட்டது.

இந்தத் தலித் என்ற சொல்லின் விரிவும் வீரியமும் மராட்டியத்திலும் கன்னடத்திலும் ஆந்திரத்திலும் பரவலாகவும் தமிழகத்தில் சிறப்பாகவும் இன்று உணரப்பட்டு வந்துள்ளது. இதன் உள்ளடக்கக் கருத்துப் பலராலும் புரிந்து கொள்ளக் கூடியதாக வியாபித்து நிலைத்துவிட்டது. இந்தச் சொல்லை இனி யாராலும் புறக்கணித்துவிட முடியாது. அலட்சியம் செய்துவிடவும் முடியாது.

அந்தச் சொல்லின் வலிமை என்னையும் ஆட்கொண்ட காரணத்தினாலேயே நான் எனது சுயசரிதையை நூலாக எழுதி வெளியிட முன்வந்தேன்.

**"மனுசங்கடா நாங்க மனுசங்கடா........'**
**தலித்திய இயக்கம் கற்றுத் தந்த மூலமந்திரம் இது. "மனுசங்கடா நாங்க மனுசங்கடா"**




**கருத்துப்படங்கள் வரவேற்றப்படுகின்றன. இளம் ஓவியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

*தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் சார்பில் வெளிவரும் மாதாந்த பிரசுரம் இது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்